
அடகு நகை மீட்டு இன்றைய மார்க்கெட் விலைக்கு விற்க நீங்கள் இருக்கும் இடத்திலேயே உடனடி பணம்
நல்ல அணுகுமுறை
தொடர்புக்கு : 70944 40944

admin@dhinakani.com
RNI-TNTAM/2023/88253
நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

| Vol: 02 | Issue: 343 | 4 Pages | 9.7.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 343 | 4 பக்கங்கள் | 9.7.2025 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப**
**கோடியு மல்ல பல**

**விளக்கம்: அறிவில்லாதவர் ஒரு வேளையாவது வாழ்க்கையின் தன்மையை ஆராய்ந்து அறிவதில்லை. ஆனால் வீணில் எண்ணுவனவோ ஒரு கோடியும் அல்ல, மிகப்பல எண்ணங்கள்.**

# கடலூர் ரெயில் விபத்து; உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் நிவாரணம்: முதலமைச்சர்

சென்னை, ஜூலை 9

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் ,

கடலூர் மாவட்டம், செம்மங்குப்பத்தில் இன்று (872025) காலை நடந்த மோசமான ரெயில் விபத்தில் விலை மதிப்பில்லாத இரண்டு இளம் பிள்ளைகளின் உயிர் பறிபோன செய்தியைக் கேட்டு அதிர்ச்சியும், மிகுந்த மனவேதனையும் அடைந்தேன். வாழ வேண்டிய வயதில் உயிரிழந்த அந்தத் துளிர்களின் மரணம் என்னை ஆற்றொன்னாத் துயரில் ஆழ்த்துகிறது.

விபத்தில் உயிரிழந்த செல்வன் நிமிலேஷ் (வயது 12), த/பெ விஜயசந்திரகுமார்) மற்றும் செல்வி சாருமதி (வயது 16), த/பெ .திராவிட மணி) ஆகிய இருவரின் பெற்றோர் மற்றும் குடும்பத்தினருக்கு என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இவ்விபத்தில் காயமடைந்து கடலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நான்கு நபர்களுக்கும் சிறப்பான சிகிச்சை அளித்திடவும் அறிவுறுத்தியுள்ளேன்.

மேலும் இந்த விபத்தில் உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோர்களுக்கு முதல்அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 5 லட்சம் ரூபாய் வழங்கிட உத்தரவிட்டுள்ளேன். பலத்த காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், லேசான காயம் அடைந்தவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.. என தெரிவித்துள்ளார்.

# ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேரை கொன்று தீ வைத்து எரித்த கிராமத்தினர்; கொடூர சம்பவம்



பாட்னா, ஜூலை 9

பீகார் மாநிலம் பூர்ணியா மாவட்டம் டகொமா கிராமத்தை சேர்ந்த பாபு லால். இவரது குடும்பத்தினரான சீதா தேவி, மன்ஜத் ஓரன். ராணியா தேவி, டபோ மோஸ்மட் மற்றும் ஒரு குழந்தை அனைவரும் ஒரே வீட்டில் வசித்து வந்தனர்.

இதனிடையே, பாபு லால் குடும்பத்துடன் சேர்ந்து மாந்திரீக வேலையில் ஈடுபடுவதாக அந்த கிராமத்தை சேர்ந்தவர்கள் நம்பியுள்ளனர். பாபு லால் மாந்திரீகத்தால் கிராமத்தில் அசம்பாவித சம்பவங்கள் நடைபெறுவதாக மூடநம்பிக்கையில் மூழ்கியுள்ளனர்.

இந்நிலையில், கிராமத்தினர் அனைவரும் சேர்ந்து நேற்று பாபு லால் வீட்டிற்கு சென்றுள்ளனர். அங்கு பாபு லால் மற்றும் அவரது குடும்பத்தினர் மொத்தம் 5 பேரை கொடூரமாக தாக்கி கொலை செய்துள்ளனர். பின்னர், 5 பேரின் உடலையும் அதேவீட்டில் வைத்து தீ வைத்து எரித்துள்ளனர். இந்த கொடூர சம்பவத்தில் ஒரு குழந்தை மட்டும் உயிர் தப்பியுள்ளது. இந்த சம்பவம் குறித்து அறிந்த போலீசார், விரைந்து வந்து கொல்லப்பட்டவர்களின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த சம்பவம் தொடர்பாகஅந்தகிராமத்தைசேர்ந்தஒருவர்கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவத்தில் தொடர்புடைய எஞ்சியவர்களை கைது செய்ய போலீசார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இந்த கொடூர சம்பவம் அப்பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# நடுரோட்டில் காதலியை கழுத்தறுத்து கொன்ற இளைஞர்



டேராடூன், ஜூலை 9

உத்தரபிரதேச மாநிலம் சீதாபூரை சேர்ந்த இளைஞர் பிரதீப் (வயது 28). அதே ஊரை சேர்ந்த இளம்பெண் ஹன்சிகா (வயது 22). இருவரும் உத்தரகாண்ட் மாநிலம் ஹரித்வாரின் சிட்குல் பகுதியில் உள்ள தொழிற்சாலையில் வேலை செய்து வந்தனர். இருவரும் 4 ஆண்டுகளாக காதலித்து வந்த நிலையில் ஹரித்வாரில் தனியே வீடு எடுத்து லிவ் இன் முறையில் வாழ்ந்து வந்தனர்.

இதனிடையே, ஹன்சிகாவின் நடத்தையில் பிரதீப்பிற்கு சந்தேகம் ஏற்பட்டது. அவர் வேறொரு நபருடன் பேசுவதாக பிரதீப் நினைத்துள்ளார். இதனால், இருவருக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், சிட்குல்பகுதியில்உள்ளமுக்கியசாலையில்ஹன்சிகா இன்று மதியம் நடந்து சென்றுகொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த பிரதீப், ஹன்சிகாவிடம் வாக்குவாதம் செய்துள்ளார். வாக்குவாதம் முற்றிய நிலையில் தான் மறைத்து கொண்டு வந்த கத்தியால் ஹன்சீகாவின் கழுத்தை அறுத்துள்ளார். இதில் ரத்த வெள்ளத்தில் சரிந்து விழுந்த ஹன்சிகா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். தகவலறிந்து விரைந்து வந்த போலீசார் கொல்லப்பட்ட ஹன்சிகாவின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார் காதலி ஹன்சிகாவை கழுத்தறுத்து கொலை செய்துவிட்டு தப்பியோடிய பிரதீப்பை தீவிரமாக தேடி வருகின்றனர்.

# கணவருடன் சண்டையிட்டு ரெயில் நிலையத்துக்கு சென்ற பெண் கூட்டு பாலியல் வன்கொடுமை

பானிபட், ஜூலை 9

அரியானாவின் பானிபட்டை சேர்ந்த 35 வயது பெண் ஒருவர் கடந்த 24ந் தேதி தனது கணவருடன் சண்டையிட்டு வீட்டை விட்டு வெளியேறினார். ஏற்கனவே இப்படி சிலமுறை வீட்டை விட்டு வெளியேறினாலும் அவர் தானாகவே திரும்பி வந்ததால், கணவரும் அவரை தேடாமல் இருந்தார். ஆனால் 2 நாட்களாக அந்த பெண் வீடு திரும்பாததால் 26ந் தேதி போலீசில் புகார் செய்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிரமாக விசாரணை நடத்தினர்.

அப்போது கால் துண்டான நிலையில் சோனிபட் அருகே உள்ள ஆஸ்பத்திரிஒன்றில்அந்தபெண்சிகிச்சைபெற்றுவருவதுதெரியவந்தது. இது குறித்து போலீசார்நடத்திய விசாரணையில் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி உள்ளன. அதாவது வீட்டில் இருந்து வெளியேறிய அந்த பெண், பானிபட் அருகே உள்ள ரெயில் நிலையம் ஒன்றில் சோகமாக அமர்ந்து இருந்துள்ளார். அப்போது அந்த பெண்ணை அணுகிய ஒருவர், அவரது கணவர் அனுப்பியதாக கூறி அறிமுகமானார்.

பின்னர் அங்கே ரெயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த ரெயில் ஒன்றின் காலி பெட்டியில் பெண்ணை அழைத்துச்சென்று மிரட்டி பலாத்காரம் செய்துள்ளார். சிறிது நேரத்தில் அங்கு வந்த மேலும் 2 பேர் அந்த பெண்ணை கூட்டு பலாத்காரம் செய்துள்ளனர். அத்துடன் விடாத அவர்கள், அவரை சோனிபட்டுக்கு கடத்தி சென்றனர். அங்கே ரெயில் தண்டவாளத்தில் அவரை வீசியுள்ளனர். அப்போது அவ்வழியாக வந்த ரெயிலில் அந்த பெண்ணின் கால் சிக்கி துண்டாகி உள்ளது.

காமக்கொடூரர்களின் மிகவும் காட்டுமிராண்டித்தனமான இந்த செயல் அரியானாவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. இந்த பயங்கர சம்பவம் ஏற்படுத்திய அதிர்ச்சியில் இருந்து மீளாத அந்த பெண், ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார். இந்த கொடூர சம்பவம் தொடர்பாக பானிபட் ரெயில்வே போலீசார் வழக்குப்பதிவு செய்து, கூட்டு பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்ட 3 பேரையும் வலைவீசி தேடி வருகின்றனர்.

# "ஜே.எம்.ஜே. மீடியா (PVT LTD) நடாத்திய உலக சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு திட்டத்திற்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வெற்றிகரமாக நிறைவு"

சுற்றுப்புற சூழலைக் காக்கும் பெரும் பொறுப்பை அனைவரும் உணர வேண்டும் என்ற நோக்குடன் ஜே.எம்.ஜே. மீடியா (PVT LTD) நிறுவனம் நடாத்திய சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு திட்ட நிகழ்ச்சிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவரையும் அவர்களின் சமூக சேவையை பாராட்டி ஜே.எம்.ஜே மீடியா வாயிலாக சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வின் முக்கிய நோக்கம் "பூமியை நேசிக்கவும், பசுமையை பாதுகாக்கவும்" என்ற தூய கருப்பொருளை மக்களிடையே பரப்புவதாகும். இன்று உலகம் எதிர்கொள்கின்ற பருவநிலை மாற்றம், காற்று மாசு, நீர் பற்றாக்குறை போன்ற பிரச்சனைகள் நாளைய தலைமுறையின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்குகிறது. இதை மாற்றுவது அனைத்துப் பொதுமக்களினதும் பொறுப்பாகும் என்பதை வலியுறுத்தும் விதமாக நிகழ்ச்சி முன்னெடுக்கப்பட்டது.

மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் பல துறைகளை சேர்ந்த நபர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நவீன யுக்திகள், பசுமை வாழ்க்கைமுறை, மரம் நடும் முக்கியத்துவம் போன்ற தலைப்புகளில் உள்ளடக்கம் கொண்ட கவிதைகள், நாடகங்கள்மற்றும்ஓவியங்கள்வழியாகவிழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.




நிகழ்வின் சிறப்பு அம்சமாக, மாணவர்கள் தங்களின் சொந்த முயற்சிகளின் மூலம் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஊக்குவிக்கும் விதமாக பசுமை சவால்கள், கண்காட்சிகள்மற்றும்கலைநிகழ்ச்சிகளை நிகழ்த்தினர். பல்வேறு நாடுகளிலிருந்து பங்கேற்ற மாணவர்கள் உலகளாவிய சூழல் பிரச்சனைகளை தங்கள் கலைமொழி வாயிலாகப் பதிவு செய்தனர்.

நிறுவனத்தின் பணிப்பாளர் தலைவி ஜஸூரா ஜலீல் அவர்களின் வழிகாட்டுதலிலும், உலகளாவிய ஒருங்கிணைப்பாளர்களின் ஒத்துழைப்பிலும் நிகழ்ச்சி சிறப்பாக நடாத்தப்பட்டது. "பசுமை பூமி, பாதுகாப்பான எதிர்காலம்" என்ற ஊக்கவுரை ஒவ்வொருவரின் மனத்திலும் பதிவாகும் வகையில் நிகழ்ச்சி நிறைவடைந்தது.

இந்த நிகழ்வில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களோடு பொதுமக்களும் உற்சாகமாக பங்கேற்றனர். சிறுவர்களின் ஆர்வம் மற்றும் பசுமை எதிர்காலம் குறித்து அவர்கள் காட்டிய உறுதி இந்நிகழ்வின் சிறப்பம்சமாகும்.

# தாராபுரம் மாவட்ட திராவிடர் கழக சார்பில் காமராசபுரம் நகர பக தலைவர் மு.மாரிமுத்து தலைமையிலும் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா

தாராபுரம் மாவட்ட திராவிடர் கழக சார்பில் நகர திக தலைவர் இரா.சின்னப்பதாசு, நகர திக செயலாளர் வள்ளல்சித்திக் ஆகியோர் முன்னிலையில் அண்ணா சிலை அருகில் நகர பக செயலாளர் மு. மோகன் தலைமையிலும் இரவு 8 மணிக்கு காமராசபுரம் நகர பக தலைவர் மு.மாரிமுத்து தலைமையிலும் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா தெருமுனை பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது தலைமைகழகபேச்சாளர்கோவை புளியகுளம் க.வீரமணி அவர்கள் சிறப்புரை ஆற்றினார் கூட்டத்தில் மாவட்ட காப்பாளர் கே.என்.புள்ளியான்,மாவட்ட தலைவர் க.கிருஷ்ணன், மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் தம்பி பிரபாகரன், மாவட்டத்துணை தலைவர் ச.ஆறுமுகம், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.மயில்சாமி, வழக்கறிஞர் நா.சக்திவேல், மாவட்ட பகசெயலாளர்பு.முருகேசு, மாவட்ட தொழிலாளரணி செயலாளர் மா.சிவகுமார், நகர இளைஞரணி அமைப்பாளர் கு.கோடீஸ்வரன் உடுமலை நகர செயலாளர்த.முருகேசன், மடத்துக்குளம் ஒன்றிய செயலாளர் மா.தங்கவேல், ஒன்றிய அமைப்பாளர் நா.செல்வராஜ், அலங்கியம் ப. பரமசிவம், தாராபுரம் வே.மாரியப்பன், மடத்துக்குளம் ஒன்றிய இளைஞரணி செயலாளர் சதீஷ்குமார், கணியூர் அர்ச்சுனன், கணியூர் திமுக கவுன்சிலர் ஆனந்தன், நாகராஜ், விசிக மாநில விவசாய பாதுகாப்பு அணி துணை செயலாளர் பி. முத்தமிழ் வேந்தன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்




# தாராபுரத்தில் தமிழர் ஆட்சி கழகம் மற்றும் தேவேந்திர குல மக்கள் முன்னேற்றக் கழக பேரவை சார்பில் ஆலோசனை கூட்டம்

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் தமிழர் ஆட்சி கழகம் மற்றும் தேவேந்திர குல மக்கள் முன்னேற்றக் கழக பேரவை சார்பில் தனியார் அரங்கில் நடைபெற்ற இந்த ஆலோசனை கூட்டத்தில் கட்சியின் நிறுவனர் தலைவர் டாக்டர் எஸ் ஆர் பாண்டியன் இளைய சேகரன் தலைமையில் முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர் இக்கூட்டத்தில்நிறுவனத்தலைவர்டாக்டர் என் ஆர் பாண்டியன் கூறுகையில் ஆகஸ்ட் மாதத்தில் தாராபுரத்தில் சமூக நீதி காப்போம் என்ற தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது முதல் கட்டமாக 10 மாவட்டங்களில் இத்தகைய கூட்டங்கள் நடைபெற திட்டமிட்டப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார் மேலும் கூட்டத்தில் சமூக நீதிக்காக போராடிய சட்டமேதை டாக்டர் பி ஆர்அம்பேத்கரின்முழுஉருவச்சிலை தாராபுரத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் திருப்பூர் மாவட்டத்தில் புதிய அரசு சட்டக் கல்லூரி தொடங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது தாராபுரம் பகுதியில் இளைஞர்களுக்கான தனி விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டும் என கோரிக்கை ஒழிக்கப்பட்டுள்ளது வார்டு தோறும் நூலகம் அமைப்பதன் மூலம் மாணவர்கள் அறிவு வளர்ச்சி பெரும் வகையில் திட்ட மிடப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன இக்கூட்டத்தில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்த நிர்வாகிகள் உள்ளூர் சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்று சமூக நீதிக்கான போராட்டத்திற்கு தங்களது முழு ஆதரவையும் தெரிவித்தனர்




உங்கள் செய்திகள் நிகழ்ச்சிகள் தினக்கனியில் வர வேண்டுமா
தொடர்புக்கு:9448699066
WHATSAPP CHENEL
DHINAKANI.COM

# மதுக்கூர் அருகே கல்யாணபுரீஸ்வரர் கோவில் கும்பாபிஷேகம்

தஞ்சாவூர் ஜூலை 9

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை அடுத்த மதுக்கூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட கல்யாண ஓடை கிராமத்தில் அமைந்துள்ளது அருள்மிகு பெரியநாயகி அம்பாள் உடனுறை ஸ்ரீ கல்யாணபுரீஸ்வரர் திருக்கோவில். இக்கோவிலுக்குகும்பாபிஷேகம் செய்ய முடிவு செய்யப்பட்டு, திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

திருப்பணிகள் நிறைவடைந்த நிலையில், கும்பாபிஷேகத்திற்கான யாகசாலை பூஜைகள் நடைபெற்றன. நேற்று காலை யாக சாலை பூஜைகள் நிறைவடைந்தன. அதன்பின், கடம் புறப்பாடு நடைபெற்றது. புண்ணிய நதியிலிருந்து கொண்டுவரப்பட்ட புனிதநீர்அடங்கிய குடங்களை, மேளதாளங்கள் முழங்க மங்கள இசையுடன் சிவாச்சாரியார்கள்சுமந்து வந்தனர்.



பின்னர் வேத மந்திரங்கள் முழங்க கருட பகவான் வானில் வட்டமிட, குடங்களில் கொணடு வரப்பட்ட புனித நீரை சிவாச்சாரியார்கள் கும்பத்தில் ஊற்றி அபிஷேகம் செய்தனர். கும்பாபிஷேக நிகழ்வில் ஏராளமானோர் பங்கேற்று தரிசனம் செய்தனர். பக்தர்கள் மீது புனித நீர் தெளிக்கப்பட்டது. ட்ரோன் மூலமும் புனித நீர் தெளிக்கப்பட்டது. இதையடுத்து மூலஸ்தான மகாபிஷேகம் நடைபெற்று தீபாரதனைகள் காண்பிக்கப்பட்டது.

# சர்ச்சைகளுக்கு மத்தியில்.. மீண்டும் கல்லூரி பணிக்கு திரும்பிய பேராசிரியை நிகிதா



திண்டுக்கல், ஜூலை 9

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே மடப்புரம் பத்ரகாளியம்மன் கோவிலில் காவலாளியாக வேலை பார்த்தவர் அஜித்குமார் (வயது 27). இவர் மீது மதுரை ஆலம்பட்டியை சேர்ந்த பேராசிரியைநிகிதா,நகைதிருட்டு புகார் அளித்து இருந்தார். அதன்பேரில் அஜித்குமாரிடம் போலீசார் விசாரணை நடத்தினர்.

அப்போது போலீசார் தாக்கியதில் அஜித்குமார் உயிரிழந்தார். இந்த சம்பவம் தமிழகம் முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

நிகிதா, திண்டுக்கல் எம்.வி.எம். அரசு மகளிர் கலைக்கல்லூரியில் தாவரவியல் பேராசிரியையாக பணியாற்றுகிறார். மேலும் காவலாளி அஜித்குமார் மரணத்துக்கு பின்னர் அவர் கல்லூரிக்கு வரவில்லை. விடுமுறையில் இருந்ததாக கூறப்பட்டது. இதற்கிடையே பேராசிரியை தொடர்பாக புதுப்புது தகவல்கள் வெளியாகின.

குறிப்பாக கடந்த ஆண்டு பேராசிரியை நிகிதா மீது கல்லூரி மாணவிகள் திண்டுக்கல் கலெக்டர் அலுவலகத்தில் ஒரு புகார் மனு கொடுத்தனர். அதில் பேராசிரியை மனரீதியாக துன்புறுத்துவதாகவும், அவரை பணியிட மாற்றம் செய்ய வேண்டும் என்றும் தெரிவித்து இருந்தனர். ஆனால் அந்த புகார் தொடர்பாக பேராசிரியை மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

காவலாளி அஜித்குமார் உயிரிழப்புக்கு காரணமான போலீசார் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மருத்துவ விடுமுறை எடுத்துச் சென்று இருந்த பேராசிரியை நிகிதா, சர்ச்சை மற்றும் பரபரப்புக்கு மத்தியில் திண்டுக்கல் அரசு மகளிர் கலைக்கல்லூரிக்கு வந்தார்.

பின்னர் வழக்கம்போல் வகுப்பறைக்கு சென்று மாணவிகளுக்கு பாடம் கற்பித்து, அலுவலக பணிகளை மேற்கொள்வது என தனது அன்றாட பணிகளை தொடங்கிவிட்டதாக கல்லூரி நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

# பள்ளி வேன் விபத்தில் குழந்தைகள் பலி; அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்: செல்வப்பெருந்தகை அறிக்கை

கடலூர், ஜூலை 9

கடலூரில் செம்மங்குப்பம் அருகே கடலூர்ஆலப்பாக்கம் இடையே பள்ளி வேன் ஒன்று குழந்தைகளை ஏற்றி கொண்டு இன்று காலை சென்று கொண்டிருந்தது. அப்போது, வழியில் ரெயில்வே கேட் ஒன்று இருந்தது. அதன் வழியே அந்த பள்ளி வேன்கடந்து செல்ல முயன்றபோது, அந்த வழியே விழுப்புரத்தில் இருந்து மயிலாடுதுறை நோக்கி சென்ற ரெயில் பள்ளி வேன் மீது மோதியது.

இந்த கோர விபத்தில், வேன் பல மீட்டர் தூரத்திற்கு இழுத்து செல்லப்பட்டது. இதில் வேனில் இருந்த குழந்தைகள் தூக்கி வீசப்பட்டனர். பள்ளி மாணவ மாணவிகள் 3 பேர் பலியாகி உள்ளனர். இந்த சம்பவத்திற்கு தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை இரங்கல் தெரிவித்து அறிக்கை வெளியிட்டு உள்ளார்.

அதில், கடலூர் அருகே செம்மங்குப்பத்தில் பள்ளி வேன் மீது ரெயில் மோதியதில் பள்ளி குழந்தைகள் இருவர் உயிரிழந்த செய்தி அறிந்து மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.



பொதுமக்கள் தினமும் கடக்கும் ரெயில்வே வழிகளில் பாதுகாப்பு இல்லாமல் இருப்பது மிகவும் வருத்தத்திற்குரியது. மக்கள் எங்கு அதிகம் செல்கிறார்களோ அந்த இடங்களில் பாதுகாப்பும், எச்சரிக்கையும் கட்டாயம் இருக்க வேண்டும். இத்தகைய துயரங்களுக்கு ரெயில்வே துறை முழு பொறுப்பு ஏற்க வேண்டும். மத்திய ரெயில்வே மந்திரி நேரடியாக இதனை கவனித்து, பாதுகாப்பு குறைபாடுகளை உடனடியாக சரி செய்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாட்டு மக்களின் உயிர்களை பாதுகாப்பதுதான் ஓர் அரசின் முதல் கடமையாகும். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு உரிய இழப்பீடும் காயமடைந்தவர்களுக்குசிறப்பு மருத்துவ சிகிச்சையும் பெற மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# நோய் குணமாக தனிமையில் ஜெபம்... இளம்பெண்ணிடம் அத்துமீறல்: மதபோதகர் கைது



தக்கலை, ஜூலை 9

குமரி மாவட்டம் தக்கலை அருகே உள்ள ஒரு பகுதியைச் சேர்ந்த 26 வயது இளம்பெண்ணுக்கு 2 வருடங்களுக்கு முன்பு திருமணமானது. குழந்தைகள் இல்லை. அதே சமயத்தில் உடல்நலக்குறைவு ஏற்பட்டதால், சில மாதங்களுக்கு முன்பு அவரது தாயார் வீட்டிற்கு சென்று தங்கியுள்ளார்.

அப்போது உறவினர்கள் கூறியதன்அடிப்படையில் மேக்காமண்டபம் பாண்டிவிளை பகுதியில் உள்ள ஒரு சபைக்கு சென்றுள்ளார். அங்கு சபை போதகராக ரெஜிமோன் (வயது 43) இருந்தார். அவர், இளம்பெண்ணின் நோய் குணமாக தனிமையில் ஜெபம் செய்ய வேண்டும் என கூறியுள்ளார்.

இதனை நம்பிய பெற்றோர், மகளை மட்டும் ஜெபம் செய்யும் அறைக்கு அனுப்பி உள்ளனர். அந்த சமயத்தில் போதகர் ரெஜிமோன், பெண்ணின் அழகில் மயங்கி ஜெபம் செய்வதை மறந்தார். அந்த பெண்ணை திடீரென கட்டிப்பிடித்து பலாத்காரம் செய்ய முயன்றுள்ளார்.

மதபோதகரின் அத்துமீறிய செயலை உணர்ந்து அதிர்ச்சி அடைந்த அந்த பெண், போதகரின் பிடியில் இருந்து தப்பித்து வெளியே ஓடி வந்துள்ளார். பிறகு நடந்த விவரத்தை பெற்றோரிடம் கூற, அவர்களும் வெகுண்டெழுந்தனர். அதே சமயத்தில் கோபத்தை தணித்துக் கொண்டு முறைப்படி தக்கலை போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். அந்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து ரெஜிமோனை கைது செய்தனர்.

மேலும் இதுபோன்று அவர் வேறு பெண்களிடம் அத்துமீறியுள்ளாரா? என்பது குறித்தும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பகுதிநேர ஆசிரியர்களை கைது செய்து அடக்குமுறையை கையாள்வதா...? டி.டி.வி.தினகரன் கேள்வி



சென்னை, ஜூலை 9

அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் தனது எக்ஸ் பக்கத்தில்வெளியிட்டபதிவில் தெரிவித்திருப்பதாவது,

பணி நிரந்தரம் கோரி ஜனநாயக ரீதியில் போராடும் பகுதிநேர ஆசிரியர்களைகைது செய்து அடக்குமுறையை கையாள்வதா? – தேர்தலுக்கு முன்பாக அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற மறுக்கும் தி.மு.க அரசின் ஏதேச்சதிகாரப் போக்கு கடும் கண்டனத்திற்குரியது.

பணி நிரந்தரம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தி சென்னையில் சிறை நிரப்பும் போராட்டத்தில் ஈடுபட முயன்ற நூற்றுக்கணக்கான பகுதிநேர ஆசிரியர்கள் காவல் துறையினரால் வலுக்கட்டாயமாக கைது செய்யப்பட்டிருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

தமிழக அரசுப்பள்ளிகளில் ஓவியம், இசை, உடற்கல்வி மற்றும் கணினி பாடங்களை பயிற்றுவிக்க நியமிக்கப்பட்ட பகுதி நேர ஆசிரியர்களின்பணி நிரந்தரம் என்ற நீண்ட நாள்கோரிக்கையை ஏற்க மறுத்து அவர்கள் மீது அடக்குமுறையை ஏவியிருக்கும் தி.மு.க அரசின் ஏதேச்சதிகாரப்போக்கு கடும் கண்டனத்திற்குரியது.

பள்ளிக்கல்வித்துறையில் பணியாற்றும் பகுதி நேர ஆசிரியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என தேர்தல் அறிக்கையில் 181வது வாக்குறுதியாக அளித்த தி.மு.க., ஆட்சிக்குவந்து நான்கு ஆண்டுகளைக் கடந்த பின்பும் அவற்றை நிறைவேற்ற மறுப்பதும், ஒவ்வொரு போராட்டத்தின் போதும் கோரிக்கைகளைநிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்து ஏமாற்றுவதும் ஒட்டுமொத்த ஆசிரியர்களுக்கும் இழைக்கும் மாபெரும் அநீதி ஆகும்.

தேர்தலுக்கு முன்பாக "உங்கள் தொகுதியில் ஸ்டாலின்" எனும் தலைப்பில் பரப்புரை மேற்கொண்டு, அங்கு பெறப்படும் மனுக்களுக்கு நூறு நாட்களில் தீர்வு காணப்படும் என்ற தற்போதைய முதலமைச்சரின் பொய்யான வாக்குறுதியை நம்பி மனு அளித்த 12 ஆயிரத்திற்கும் அதிகமான ஆசிரியர்களின் வாழ்வாதாரம் கேள்விக் குறியாகியுள்ளது.

எனவே, காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களை எந்தவித நிபந்தனையுமின்றி உடனடியாக விடுவிப்பதோடு, பகுதிநேர ஆசிரியர்களின் நீண்ட நாள் கோரிக்கையான பணி நிரந்தரம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பள்ளிக்கல்வித்துறையையும், தமிழக அரசையும் வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பா.ம.க.வில் பரபரப்பு.. அன்புமணி ராமதாஸ் இல்லத்தில் பொறுப்பாளர்கள் கூட்டம்



சென்னை, ஜூலை 9

விழுப்புரம் மாவட்டம் தைலாபுரத்தில் பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் தலைமையில், செயற்குழுகூட்டம்இன்று நடைபெற உள்ள நிலையில், சென்னையில் உள்ள தனதுஇல்லத்தில்பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாசும் கட்சியின் முக்கிய பொறுப்பாளர்களுடன் ஆலோசனை நடத்த இருக்கிறார். இதனால், அரசியல் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாசுக்கும், அவரது மகனும், பா.ம.க. தலைவருமான டாக்டர் அன்புமணி ராமதாசுக்கும் இடையே கருத்து மோதல் நீடித்து வருகிறது. இந்த சூழலில், கட்சியின் வளர்ச்சி பணிகள், பா.ம.க. உறுப்பினர் சேர்க்கை தொடர்பாக மாவட்ட செயலாளர்களை, கடந்த மாதம் சென்னையில் 3 நாட்கள் அன்புமணி ராமதாஸ் நேரில் சந்தித்து ஆலோசனைகளை வழங்கினார்.

தொடர்ச்சியாக, ஒருங்கிணைந்த மாவட்ட வாரியாக பொதுக்குழு கூட்டம் நடத்தி கட்சியின் அடுத்தக்கட்ட பணிகள் தொடர்பாகவும் அவர் ஆலோசித்தார். அன்புமணி ராமதாசுக்கு ஆதரவாக செயல்படும் நிர்வாகிகளை, கட்சியின் பொறுப்புகளில் இருந்து டாக்டர்ராமதாஸ்நீக்கி உத்தரவு பிறப்பித்தார்.

அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், டாக்டர் ராமதாசால் பொறுப்பில் இருந்து நீக்கம் செய்யப்பட்ட நிர்வாகிகள் அதே பொறுப்பில் தொடர்வதற்கான அறிவிப்பை அன்புமணி ராமதாஸ் வெளியிட்டு வருகிறார்.

நிர்வாகிகள் மாற்றம், புதிய நிர்வாகிகள் நியமனம் என பா.ம.க.வில் அரசியல் பரபரப்பு நிலவி வந்த சூழலில், பொதுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவருக்கே நிர்வாகிகளை நியமிக்கவும், நீக்கவும் அதிகாரம் இருப்பதாக அன்புமணி ராமதாஸ் உறுதிப்பட தெரிவித்துள்ளார்.


இந்த சூழலில், விழுப்புரம் மாவட்டம் தைலாபுரத்தில் பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் தலைமையில் சமீபத்தில் நிர்வாக குழு கூட்டம் நடைபெற்றது. புதிய நிர்வாக குழு உறுப்பினர்களும் அறிவிக்கப்பட்டனர். அதில், கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் பெயர் இடம் பெறவில்லை. இதனால், பரபரப்பு ஏற்பட்டது. ஆனால், இதை கட்சியின் கவுரவ தலைவர் ஜி.கே.மணி மறுத்தார்.

இந்த பரபரப்பான சூழலில், தைலாபுரத்தில் பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் தலைமையில் செயற்குழு கூட்டம் இன்று (செவ்வாய்க்கிழமை) நடக்கிறது. இதற்கிடையில், சென்னையை அடுத்த பனையூரில் கடந்த சில நாட்களாக கட்சி நிர்வாகிகளை சந்தித்து வந்த அன்புமணி ராமதாஸ், சென்னை தியாகராயநகர் திலக் தெருவில் உள்ள தனது இல்லத்தில் கட்சியின் முக்கிய பொறுப்பாளர்களுடன்இன்று ஆலோசனை நடத்துகிறார்.

இந்த கூட்டத்தில் முக்கிய அறிவிப்பு வெளியாக வாய்ப்புகள் இருப்பதாக பா.ம.க. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதேபோல, தைலாபுரத்தில் இன்று நடக்கும் செயற்குழு கூட்டத்திலும் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளது. இதனால், அரசியலில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது

# கடலூர் விபத்து ரெயில்வே சார்பில் நிதி



கடலூர், ஜூலை 9

கடலூரில் செம்மங்குப்பம் அருகே பள்ளி வேன் ஒன்று குழந்தைகளை ஏற்றி கொண்டு இன்று காலை சென்று கொண்டிருந்தது. அப்போது, வழியில் ரெயில்வே கேட் ஒன்று இருந்தது. அதன் வழியே அந்த பள்ளி வேன் கடந்து செல்ல முயன்றது.

இந்நிலையில், பள்ளி வேன் சென்றபோது, அந்த பகுதியின் வழியே சிதம்பரம் நோக்கி ரெயில் சென்றது. அது பள்ளி வேன் மீது மோதி கோர விபத்து ஏற்பட்டது. இந்த சம்பவத்தில், வேன் பல மீட்டர் தூரத்திற்கு இழுத்து செல்லப்பட்டது. இதில் வேனில் இருந்த குழந்தைகள் தூக்கி வீசப்பட்டனர். இந்த சம்பவத்தில், 2 மாணவர், ஒரு மாணவி என 3 பேர் பலியாகி உள்ளனர்.

வேன் ஓட்டுநர் மற்றும் பள்ளி குழந்தைகள் பலர் காயம் அடைந்து உள்ளனர். அவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு உள்ளனர். பலருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின்குடும்பத்திற்கு தெற்கு ரெயில்வே சார்பில் நிவாரணம் அறிவிக்கப்ட்டுள்ளது.

உயிரிழந்த குழந்தைகளின் குடும்பத்திற்கு தலா 5 லட்சம் ரூபாயும், படுகாயம் அடைந்தகுழந்தைகளுக்கு 2.50 லட்சம் ரூபாயும், காயமடைந்த குழந்தைகளுக்கு 50,000 ரூபாயும் நிவாரணமாக அறிவிக்கப்ட்டுள்ளது.

# கடலூர்: கோர ரெயில் விபத்து; நடந்தது என்ன? ரெயில்வே விளக்கம்

கடலூர் ஜூலை 9

கடலூரில் செம்மங்குப்பம் அருகே கடலூர்ஆலப்பாக்கம் இடையே பள்ளி வேன் ஒன்று குழந்தைகளை ஏற்றி கொண்டு இன்று காலை சென்று கொண்டிருந்தது. அப்போது, வழியில் ரெயில்வே கேட் ஒன்று இருந்தது. அதன் வழியே அந்த பள்ளி வேன் கடந்து செல்ல முயன்றது. இந்நிலையில், பள்ளி வேன் சென்றபோது, அந்த பகுதியின் வழியே விழுப்புரத்தில் இருந்து மயிலாடுதுறை நோக்கி ரெயில் சென்றது. அது பள்ளி வேன் மீது மோதி கோர விபத்து ஏற்பட்டது. இந்த சம்பவத்தில், வேன் பல மீட்டர் தூரத்திற்கு இழுத்து செல்லப்பட்டது. இதில்வேனில்இருந்தகுழந்தைகள்தூக்கிவீசப்பட்டனர்.

இதுபற்றி தகவல் அறிந்து, அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் ஓடி சென்று அவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். போலீசாருக்கும், ஆம்புலன்சுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. இந்த சம்பவத்தில், ஒரு மாணவர், ஒரு மாணவி என 2 பேர் பலியாகி உள்ளனர். வேன் ஓட்டுநர் மற்றும் பள்ளி குழந்தைகள் பலர் காயம் அடைந்து உள்ளனர். அவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு உள்ளனர். பலருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த விபத்தின்போது, ரெயில்வே கேட் மூடப்படாமல் இருந்துள்ளது. ரெயில்வே கேட்டை மூடுவதற்காக இருந்த ரெயில்வே கேட் கீப்பர் கேட்டை மூடவில்லை என கூறப்படுகிறது. அவர் பணியின்போது தூங்கியதில் ரெயில் வரும்போது கேட் மூடாமல் விடப்பட்டு உள்ளது. இது விபத்திற்கான முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது. இதனை தொடர்ந்து, ரெயில்வே கேட் கீப்பர் மீது பொதுமக்கள் தாக்குதல் நடத்தினர். கடலூர், சிதம்பரம், மயிலாடுதுறை, தஞ்சை, விழுப்புரம், சென்னை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு செல்ல வேண்டிய ரெயில்கள் இந்த வழியே செல்கின்றன. இதனால், அந்த வழியே செல்லும் ரெயில் போக்குவரத்தும் பாதிப்படைந்து உள்ளது. இந்த சம்பவம் பற்றி ரெயில்வே தரப்பில் இருந்து விளக்கம் அளிக்கப்பட்டது. அதில், ரெயில்வே கேட்டை திறக்கும்படி கேட் கீப்பரிடம் வேன் ஓட்டுநர் வலியுறுத்தியுள்ளார். வேன் போகும் வரை கேட்டை மூட வேண்டாம் என அவர் கூறினார் எனதெரிவிக்கப்பட்டு உள்ளது. இதேபோன்று கேட்டை பாதி மூடி கொண்டிருக்கும்போது, வேன் ஓட்டுநர் உள்ளேசென்றார்எனமற்றொருதகவலும்கூறப்படுகிறது. கேட் கீப்பர் பணியின்போது தூங்கியதே விபத்துக்கான காரணம் என பொதுமக்கள் கூறி வரும் நிலையில், ரெயில்வே மாறுபட்ட விளக்கம் அளித்துள்ளது.

# ஆனிப்பெருந்திருவிழா: நெல்லையப்பர் கோவிலில் தேரோட்டம்

நெல்லை, ஜூலை 9

நெல்லை டவுன் நெல்லையப்பர் காந்திமதி அம்பாள் கோவில் ஆனிப்பெருந்திருவிழா கடந்த 30ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. தினமும் காலை, இரவில் சுவாமி அம்பாள்வீதிஉலாமற்றும் சிறப்பு பூஜைகள், பக்தி இசை நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.

விழாவில் நேற்று காலை சுவாமி நடராஜ பெருமாள் பச்சை சாத்தி வீதிஉலா வந்தார். மாலை சுவாமி கங்காளநாதர் தங்க சப்பரத்தில் வீதிஉலா சென்றார். இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு கங்காளநாதருக்கு காணிக்கை செலுத்தி வழிபட்டனர். இரவு 10 மணிக்கு தங்க கைலாச பர்வத வாகனத்திலும், அம்பாள் தங்க கிளி வாகனத்திலும் தேர்கடாட்சம் உலாவும் ரதவீதியும் சென்றனர். இதில் பக்தர்கள் பலர் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

திருவிழாவின் சிகர நிகழ்ச்சியான தேரோட்டம் இன்று (செவ்வாய்க்கிழமை) நடைபெறுகிறது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும்தயார்உள்ளன. 5 தேர்களும் அலங்காரம் செய்யப்பட்டு, புதிய வடங்களும் இணைக்கப்பட்டு உள்ளன. வாழை தோரணங்களும் கட்டப்பட்டு உள்ளன.



இதையொட்டி டவுன் 4 ரதவீதிகளிலும் புதிதாக தார் ரோடு போட்டு சீரமைக்கப்பட்டு உள்ளது.

இன்று அதிகாலையில் சுவாமி, அம்பாள் அந்தந்த தேர்களில் எழுந்தருளுகிறார்கள். காலை 8 மணி அளவில் சுவாமி நெல்லையப்பர் தேரை சபாநாயகர் அப்பாவு, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு உள்ளிட்டோர் வடம் பிடித்து இழுத்து தொடங்கி வைக்கிறார்கள்.

முன்னதாக அதிகாலையில் விநாயகர், முருகர் தேர்கள் இழுக்கப்பபடுகிறது. சுவாமி தேரை தொடர்ந்து அம்பாள் தேர் இழுக்கப்படுகிறது. இறுதியாக சண்டிகேஸ்வரர் தேர் இழுக்கப்படும்.

இதையொட்டி ஏராளமான பக்தர்கள் ரதவீதிகளில் குவிந்த வண்ணம் உள்ளனர். இதனால் நெல்லை நகரமே விழாக் கோலம் பூண்டுள்ளது.

மேலும் பக்தர்களின் பாதுகாப்புக்காக 300க்கும் மேற்பட்ட கண்காமிப்பு கேமராக்கள் பொருத்தப் பட்டு உள்ளன. மேலும் 3 டிரோன்களும் பயன்படுத்தப்படுகிறது. ரதவீதிகளில் 16 காவல் உதவி மையங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

நெல்லை மாநகர போலீஸ் கமிஷனர் சந்தோஷ் ஹடிமணி தலைமையில் 1,000க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர்.

தேரோட்டத்தையொட்டி போக்குவரத்திலும் மாற்றம் செய்யப்பட்டு உள்ளது. டவுன் பஸ்கள் ரதவீதி பகுதிக்குள் வராமல், மாநகராட்சி எதிரே உள்ளபொருட்காட்சி திடல் தற்காலிக பஸ் நிலையத்துக்கு வந்து செல்ல வேண்டும். தென்காசி, ஆலங்குளம், சுரண்டை, கடையத்தில் இருந்து நெல்லை புதிய பஸ் நிலையம் வருகிற பஸ்கள் பழைய பேட்டை, கண்டியபேரி சாலை வழியாக ராமையன்பட்டி,

சத்திரம் புதுக்குளம், சங்கரன்கோவில் ரோடு, தச்சநல்லூர் வடக்கு புறவழிச்சாலை, வண்ணார்பேட்டை வழியாக புதிய பஸ் நிலையம் செல்ல வேண்டும். இந்த வழித்தடத்தில் சந்திப்புக்கு வருகிற டவுன் பஸ்கள் ராமையன்பட்டி சந்திப்பில் இருந்து வலதுபுறமாக திரும்பி குருநாதன் கோவில் விலக்கு, தச்சநல்லூர் பஜார், ராம் தியேட்டர் வழியாக சந்திப்புக்கு செல்ல வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# பொற்கொடி ஆம்ஸ்ட்ராங்கின் புதிய கட்சிக்கு எதிராக பகுஜன் சமாஜ் வழக்கு




சென்னை, ஜூலை 9

தமிழ் மாநில பகுஜன் சமாஜ் என்ற பெயரில் பொற்கொடி ஆம்ஸ்ட்ராங் கட்சி தொடங்கியதை எதிர்த்து வழக்கு தொடர உள்ளதாக பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவர் ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

முன்னதாக த.வெ.க. கொடியில் யானை சின்னம் தொடர்பான வழக்கின் விசாரணை சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் இன்று நடந்த நிலையில், பொற்கொடி ஆம்ஸ்ட்ராங் தொடங்கிய கட்சியின் கொடியிலும் யானை படம் இருப்பதாக த.வெ.க. சார்பில் வாதம் முன்வைக்கப்பட்டது. அதற்கு எதிராகவும் வழக்கு தொடரப்படும் என பகுஜன் சமாஜ் தரப்பு பதில் அளித்தது. இதற்கிடையே, இந்த வழக்கின் விசாரணை வரும் 11ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# ரிதன்யா வழக்கில் கணவர், மாமனார் மற்றும் மாமியாரின் ஜாமின் மனுக்கள் தள்ளுபடி



திருப்பூர்: ஜூலை 9

ரிதன்யா வழக்கில் கணவர், மாமனார், மாமியாரின் ஜாமின் மனுக்களை திருப்பூர் முதன்மை நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. கவின்குமார், ஈஸ்வர மூர்த்தி சித்ரா தேவி தம்பதிக்கு ஜாமின் வழங்க ரிதன்யா குடும்பத்தினர் தரப்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட நிலையில், ஜாமீன் மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

வழக்கின் விவரம்

திருப்பூர் மாவட்டம், அவிநாசி அருகே கைகாட்டிபுதூர் பகுதியைச் சேர்ந்த ரிதன்யா (வயது 27), வரதட்சணை கொடுமை காரணமாக ஜூன் 28ந்தேதி பூச்சி மருந்து குடித்து தற்கொலை செய்து கொண்டார். இந்த சம்பவம் தமிழ்நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. ரிதன்யாவின்பெற்றோர்அளித்த புகாரின் அடிப்படையில், அவரது கணவர் கவின்குமார் (வயது 28) மற்றும் மாமனார் ஈஸ்வரமூர்த்தி ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, இருவரும் கைது செய்யப்பட்டு திருப்பூர் கிளைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, இந்த வழக்கில், கவின்குமார் மற்றும் ஈஸ்வர மூர்த்தி ஆகியோர் திருப்பூர் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் ஜாமின் கோரி மனு தாக்கல் செய்தனர். அவர்கள் தரப்பில், ரிதன்யாவின் மரணத்திற்கு வரதட்சணை தொடர்பில்லை என்றும்,

அவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் தவறானவை என்ற வாதத்தை முன்வைத்து இருந்தனர்.

# அங்கன்வாடி மையங்களின் எண்ணிக்கை குறைக்கப்படாது; அமைச்சர் கீதா ஜீவன்



சென்னை, ஜூலை 9

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி. கீதாஜீவன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழ்நாடு முழுவதும் அங்கன்வாடி மையங்களில் போதிய ஊழியர்கள் இல்லாததால் குழந்தைகளை அனுப்ப பெற்றோர் தயக்கம் காட்டுகின்றனர் எனவும், இந்த ஆண்டு மட்டும் 501 அங்கன்வாடி மையங்கள் மூடப்பட்டுள்ளன என 05.07.2025 அன்று நாளிதழில் வெளியிடப்பட்டுள்ள செய்தி முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும்.

அரசிற்கு அவப்பெயர் ஏற்படுத்தும் வண்ணம் தொடர்ந்து இதுபோன்ற உண்மைக்கு புறம்பான செய்தி பிரசுரிக்கப்பட்டு வருகிறது. இச்செய்தியின் அடிப்படையில் தமிழக பா.ஜ. தலைவர் நயினார் நாகேந்திரன், முன்னாள் முதல்அமைச்சர் பன்னீர் செல்வம், தமிழகத்தில் 500 அங்கன்வாடி மையங்களை மூடுவதற்கு கண்டனத்தை தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளனர். அவ்வறிக்கைகள் உண்மை நிலைக்கு புறம்பானவைகளாக உள்ளன. இவ்வரசு 2021ஆம் ஆணடு பொறுப்பேற்றபோது 54,439 அங்கன்வாடி மையங்கள்மட்டுமே தமிழகத்தில் செயல்பட்டு வந்தன. கழகத் தலைவர் தளபதியார் ஆட்சி பொறுப்பேற்றபின்பு கடந்த நான்கு ஆண்டுகளில், மேலும் கூடுதலாக 44 அங்கன்வாடி மையங்கள் புதிதாக அனுமதிக்கப்பட்டு தற்போது 54,483 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்த வரை, அனைத்து குழந்தைகள் மையங்களும் தற்போது வரை சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. அவ்வெண்ணிக்கை ஒருபோதும் குறைக்கப்படாது. தேவைப்படின், கூடுதலாக அங்கன்வாடி மையங்கள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மாநிலத்தின் அனைத்து பகுதிகளையும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் கொண்டு வர வேண்டும் என்பதற்காக, ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட 54,483 அங்கன்வாடி மையங்கள் எண்ணிக்கைக்குள், தேவையான இடத்திற்கு குழந்தைகள் மையங்களை இடமாற்றம் செய்வதற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. அதனடிப்படையில்தான், அதிக நகரமயமாக்கல் காரணமாக இடம்பெயரும் மக்கள் தொகை (migration population), பயனாளிகளின் வருகை ஆகியவற்றை கருத்தில் கொண்டு, முதன்மை அங்கன்வாடி மையத்தினை குறு மையமாகவும், குறு மையத்தினை முதன்மை அங்கன்வாடி மையமாக மாற்றிடவும், திட்டம் சென்றடையாத புதிய பகுதிகளில், புதிய மையங்களை துவக்கிடவும், குறைவான பயனாளிகள் கொண்டு அருகருகே உள்ள இரு மையங்களை இணைத்திடவும், தூரத்தில் செயல்படும் மையங்களை பயனாளிகளின் வசிப்பிடத்திற்கு அருகிலேயே புதிதாக ஆரம்பிக்கவும், மலைப்பகுதி மற்றும் யாரும் எளிதில் சென்றடைய முடியாத பகுதிகளை கண்டறிந்து புதிதாக குறு மையங்களை ஆரம்பித்திடவும், கடந்த ஆறு மாதங்களாக அங்கன்வாடி மையங்கள் மறுசீரமைப்பு நடவடிக்கைக்காக (rationalisation exercise) புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

மேற்கூறிய யாவையும் தமிழ்நாடு அரசின் பரிசீலனையில் மட்டுமே உள்ளது. இந்த மறுசீரமைப்பு இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அவ்வாறு நடைமுறைப்படுத்தும் போதும் 54,483 குழந்தைகள் மையங்களை தமிழ்நாடு அரசு தொடர்ந்து நடத்தும், நிலைமை இவ்வாறு இருக்க, தற்போது 54,483 குழந்தைகள் மையங்கள் செயல்பட்டு வரும் தருணத்தில் புதிதாக 501 மையங்கள் மூடப்பட்டுள்ளன என்ற செய்தி உண்மைக்கு புறம்பானதாகும்.

மேலும், தற்போது 7,783 அங்கன்வாடி காலிப்பணி இடங்களை நிரப்ப அரசாணை வெளியிடப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் நேர்முகத் தேர்வு நடைபெற்று வருகின்றது. விரைவில் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# கணவர் உயிரிழந்தது கூட தெரியாமல் பிணத்துடன் 5 நாட்கள் இருந்த மனைவி



கோவை ஜூலை 9

கோவை தெற்கு உக்கடம் கோட்டைப்புதூர் பகுதியை சேர்ந்தவர் சேட் என்றஅப்துல்ஜாபர்(வயது 48). இவருடைய மனைவி சமீம் நிஷா (45). இவர்களுக்கு ஷாருக்கான் (26) என்ற மகனும், ஒரு மகளும் உள்ளனர். அப்துல் ஜாபர்கூலி வேலை செய்து வந்தார்.

குடிபழக்கத்துக்கு அடிமையான அப்துல் ஜாபர், சரியாக வேலைக்கு செல்வது இல்லை என்று கூறப்படுகிறது. சமீம் நிஷா லேசாக மனநிலை பாதிக்கப்பட்டவர் என தெரிகிறது. ஷாருக்கானும், அவருடைய சகோதரியும் அருகில் உள்ள பாட்டி வீட்டில் வசித்து வந்தனர்.

இந்த நிலையில் கடந்த 5 நாட்களுக்கு முன்பு அப்துல்ஜாபர் வீட்டின் அருகே வசிப்பவர்கள் ஷாருக்கானின் செல்போனுக்கு தொடர்பு கொண்டு உங்கள் பெற்றோர் வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசுவதாக கூறினர். இதனையடுத்து உடனே அவர் தனது பெற்றோர்வீட்டுக்கு சென்றார். அப்போது வீட்டில் ஒருவித துர்நாற்றம் வீசியது. உடனே அவர் தனது தாயாரிடம் ஏன் இவ்வளவு அதிகமாக துர்நாற்றம் வீசுகிறது என்று கேட்டார். அதற்கு அவர் பூனை ஏதாவது செத்துக்கிடக்கும் என்று கூறினார்.

ஆனால், அவர் படுக்கை அறைக்கு சென்று பார்த்தபோது அங்கு அப்துல் ஜாபர் கட்டிலில் படுத்த நிலையில் உயிரிழந்து கிடந்தார். அவருடைய உடல் அழுகிய நிலையில் இருந்தது. இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதுபற்றி போலீசார் கூறுகையில், அப்துல் ஜாபர் உடல்நிலை சரியில்லாமல் இறந்து 5 நாட்கள் இருக்கும். அவருடைய மனைவி மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பதால் தனது கணவர் உயிரிழந்ததுகூட தெரியாமல் அவருடைய பிணத்துடன் 5 நாட்கள் வசித்து வந்து உள்ளார் என்றனர். கணவர் உயிரிழந்தது கூட தெரியாமல் அவருடைய பிணத்துடன் 5 நாட்கள் மனைவி இருந்த சம்பவம் அந்த பகுதியில் அதிர்ச்சி ஏற்படுத்தி உள்ளது.

# நிபந்தனையுடன் அமைச்சர் கே.என். நேருவின் தம்பி மீதான வழக்கு ரத்து; ஐகோர்ட்டு தீர்ப்பு

சென்னை, ஜூலை 9

இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கு பதினைந்து லட்சம் ரூபாய் அபராதம் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் அமைச்சர் கே.என்.நேருவின் சகோதரர் ரவிச்சந்திரன் மீது சிபிஐ பதிவு செய்த வழக்கை ரத்து செய்து சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. கடந்த 2013ம் ஆண்டு இந்தியன் ஓவர்சீஸ் வங்கியிடமிருந்து பெற்ற 30 கோடி ரூபாய் கடனை சகோதர நிறுவனங்களுக்கு திருப்பி விட்டதால், 22 கோடியே 48 லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டதாக அமைச்சர் நேருவின் சகோதரர் ரவிச்சந்திரன் இயக்குனராக உள்ள நிறுவனத்துக்கு எதிராக புகார் அளிக்கப்பட்டது. இதனடிப்படையில் அமைச்சர் நேருவின் சகோதரர் என்.ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் மீது 2021ம் ஆண்டு சிபிஐ வழக்குப்பதிவு செய்தது. இந்த வழக்கின் அடிப்படையில் அமைச்சர் கே.என்.நேரு உள்ளிட்டோருக்கு சொந்தமான இடங்களில் அமலாக்க துறை சோதனை மேற்கொண்டது. இந்நிலையில், எழும்பூர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை ரத்து செய்யக்கோரி அமைச்சர் நேருவின் சகோதரர் என். ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் சென்னை ஐகோர்ட்டில் மனுத்தாக்கல் செய்துள்ளனர். இந்த மனு விசாரணைக்கு வந்தபோது, அமலாக்க துறை சார்பில், சிபிஐ வழக்கை அடிப்படையாக வைத்து அமலாக்க துறை வழக்கு பதிவு செய்துள்ளதால், சிபிஐ வழக்கை ரத்து செய்யக்கோரும் வழக்கில் தங்களையும் இணைத்து கொள்ள வேண்டுமெனவும் கோரிக்கை வைக்கப்பட்டது. இதற்கு ரவிச்சந்திரன் தரப்பில், கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், இந்த வழக்கில் இன்று தீர்ப்பளித்த நீதிபதி டி.பரத சக்கரவர்த்தி, "இந்த வழக்கில் மோசடி எதுவும் நடக்கவில்லை. மோசடியில் அரசு அதிகாரிகளும் சம்மந்தப்படவில்லை. அமைச்சர் கே.என்.நேருவின் சகோதரருக்கு ரூ.30 லட்சம் அபராதம் விதிக்கிறேன். இதில் ரூ.15 லட்சத்தை இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கும், ரூ.15 லட்சத்தை தமிழ்நாடு சமரச தீர்வு மையத்திற்கும் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் வழக்கை ரத்து செய்கிறேன்" என்று கூறியுள்ளார்.

# பெண்ணிடம் தாலி சங்கிலி பறிப்பு: 2 வாலிபர்களுக்கு போலீஸ் வலை

தருமபுரி, ஜூலை 9

தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி அருகே உள்ள அ.பள்ளிப்பட்டியை சேர்ந்தவர் வெங்கடேசமணி. இவரதுமனைவிமுனியம்மாள் (வயது 36). இவர் அ.பள்ளிப்பட்டியில் உள்ள மருந்து கடையில் வேலை செய்து வருகிறார். சம்பவத்தன்று முனியம்மாள் மற்றும் மருந்து கடை உரிமையாளர் முருகேசன் ஆகிய 2 பேரும் மோட்டார் சைக்கிளில் ஒடசல்பட்டி அருகே சிந்தல்பாடி பிரிவு ரோடு அருகே வந்து கொண்டு இருந்தனர்.

அப்போது பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்த 2 வாலிபர்கள் முனியம்மாளின் கழுத்தில் இருந்த 5 பவுன் தாலி சங்கிலியை பறித்து சென்றனர். இதுகுறித்த புகாரின்பேரில் கடத்தூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து 2 வாலிபர்களையும் வலைவீசி தேடி வருகிறார்கள்.

# நாகர்கோவில்: ஓடும் ரெயில் மீது கல்வீச்சு சிறுமி காயம்



கன்னியாகுமரி, ஜூலை 9

கன்னியாகுமரியில் இருந்து கேரள மாநிலம் கொல்லத்திற்கு நேற்று முன்தினம் மாலை பயணிகள் ரெயில் புறப்பட்டு சென்றது. அந்த ரெயில் நாகர்கோவில் டவுன் நிலையம் அருகே சென்றபோது தண்டவாளத்தின் அருகே நின்றுகொண்டிருந்த சிலர் திடீரென ரெயில் மீது கல் வீசினர். இதில் ரெயிலில் பயணம் செய்த திருவனந்தபுரம் அருகே உள்ள காரக்கோணத்தைச் சேர்ந்த 12 வயது சிறுமி மீது கல் விழுந்தது. இதனால் அந்த சிறுமிக்கு படுகாயம் ஏற்பட்டது.

இதுதொடர்பாக நாகர்கோவில் ரெயில்வே போலீசார் விசாரணை நடத்தி, ரெயிலில் கல் வீசி தாக்கியதாக 2 பள்ளி மாணவர்கள் உள்பட 4 சிறுவர்களை கைது செய்தனர். பின்னர் 4 பேரும் ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர்.

# விழுப்புரம்-ராமேசுவரம் சிறப்பு ரெயில் சேவை நீட்டிப்பு

சென்னை, ஜூலை 9

தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

விழுப்புரத்தில் இருந்து புறப்பட்டு ராமேசுவரம் செல்லும் சிறப்பு ரெயிலும் (வண்டி எண்.06109), மறுமார்க்கமாக, ராமேசுவரத்தில் இருந்து புறப்பட்டு விழுப்புரம் செல்லும் சிறப்பு ரெயிலும் (06110), வரும் 12ந்தேதி முதல் 27ந்தேதி வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வழிபாட்டுத் தீண்டாமையை ஒழிக்க வேண்டும் ; ரவிக்குமார் எம்.பி.



சென்னை ஜூலை 9

காஞ்சிபுரம் மாவட்டம் வல்லக்கோட்டை முருகன் கோவில் குடமுழுக்கு விழா இன்று நடைபெற்றது. இதில் காங்கிரஸ் மாநில தலைவர் செல்வப்பெருந்தகை பங்கேற்க அனுமதி மறுக்கப்பட்டது. இது தொடர்பாக அவர் கூறுகையில், 2 ஆயிரம் ஆண்டுகளாக நீடிக்கும் பிரச்சினையை ஒரே நாளில் தீர்த்துவிடமுடியாது. அதிகாரிகள் மெத்தனப் போக்கை கடைபிடித்துள்ளனர். முதல்அமைச்சரின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கக்கூடாது என்பதால் மக்களோடு மக்களாக தரிசித்தேன் என்றார்.

இந்நிலையில், வழிபாட்டுத் தீண்டாமையை ஒழிக்க வேண்டும் விடுதலை சிறுத்தைகள் எம்.பி. ரவிக்குமார் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகையை சாதி அடிப்படையில் தடுத்து நிறுத்தினார்களா? அதற்குக் காரணமான அதிகாரிகள் யார் ? என்பதை அறிய முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் விசாரணைக்கு உத்தரவிடவேண்டும். அறநிலையத் துறை அதிகாரிகள் தவறு செய்திருந்தால் அவர்கள்மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்கு பதிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன் .

தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத்துறைக் கோயில்களில் தொடரும் 'வழிபாட்டுத் தீண்டாமை'யை ஒழிக்க உறுதியானநடவடிக்கைதேவை' என தெரிவித்துள்ளார்.

# சென்னை பெருங்குடி ரெயில் நிலையம் அருகே சாலையில் திடீர் விரிசல் பரபரப்பு



சென்னை ஜூலை 9

சென்னை பெருங்குடி ரெயில் நிலையத்திற்கு அருகே சதாசிவம் பிரதான சாலை உள்ளது.

இந்த பகுதியில் நூற்றுக் கணக்கான குடியிருப்புகள் உள்ளன.

இந்நிலையில், இந்த பிரதான சாலையில் திடீரென விரிசல் ஏற்பட்டது. சாலையில் 100 அடிக்குமேல் வெடிப்பு ஏற்பட்டுள்ளது. சாலைக்கு அருகே இன்று தனியார் நிறுவன கட்டுமான பணி நடைபெற்று வருகிறது. கட்டுமான பணியின்போது கனரக எந்திரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அப்போது, கனரக கட்டுமான எந்திரம் பயன்படுத்தப்பட்டபோது ஏற்பட்ட அதிர்வால் அருகே உள்ள சாலையில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டு மக்கள் அச்சமடைந்தனர்.

இந்த சம்பவம் குறித்து அறிந்த மாநகராட்சி அதிகாரிகள் விரைந்து சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், சாலையில் ஏற்பட்ட விரிசலை சரி செய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

# நாளைக்கே முதல்அமைச்சர் ஆகிவிடுவது போல பேசுகிறார் விஜய் மீது அமைச்சர் கே.என்.நேரு மறைமுக தாக்கு



அரியலூர், ஜூலை 9

அரியலூர் மற்றும் ஜெயங்கொண்டம் ஆகிய சட்டப் பேரவை தொகுதி தி.மு.க. பாக நிலை முகவர்கள், டிஜிட்டல் முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் அரியலூரில் நடைபெற்றது. இதில் அமைச்சர் கே என் நேரு பேசியதாவது:

திமுக கூட்டணியில் எந்தவித சஞ்சலமும், சலசலப்பும் இல்லாமல் அனைவரும் ஒற்றுமையாக உள்ளோம். ஆனால் எதிரணியினர் அப்படி அல்ல. பா.ஜ.க. கூட்டணியில் இணைந்த வுடன், அ.தி.மு.க. தொண்டர்கள் மனம் சோர்ந்துவிட்டனர். ஆட்சி அமைந்தால், அந்த அமைச்சரவையில் பா.ஜ.க.வும் பங்கு பெறும் என்று கூறி வருகின்றனர். ஆகையால் அவர்களுக்குள் ஒரு ஒற்றுமை இல்லாத நிலை உள்ளது. பா.ம.க.வினருக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினை காரணமாக நமக்கு ஒரு சாதகமான சூழல் ஏற்பட்டு உள்ளது. இந்த அரியலூர், பெரம்பலூரில் அது நமக்கு ஒரு கூடுதல் பலம்.

பா.ஜ.க.வினர் தாங்கள் தேர்தலில் வெல்லவில்லை என்றாலும் பரவாயில்லை. ஆனால் தி.மு.க. வெல்லக் கூடாது என நினைக்கின்றனர். அதனால் தான் நடிகர்கள் எல்லாம் அரசியலுக்கு வருகின்றனர். நாளையே முதல்வர் ஆகுவது போல் நான் உங்களோடு வரவில்லை, அவர்களோடு செல்லவில்லை எனகூறிக் கொண்டுள்ளார். அதற்கெல்லாம் நாம் கவலைப்பட தேவையில்லை. இளைஞரணியினர் சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர். எனவே அனைவரும் சிறப்பாக செயல்பட்டு தேர்தலில் வெற்றிப் பெற்று மீண்டும் மு.க.ஸ்டாலினை முதல்வராக்குவது நமது கடமை. இவ்வாறு அவர் பேசினார்.

# தொடர் குற்றத்தில் ஈடுபடும் குற்றவாளிகள்; ஜாமீனை ரத்து செய்ய போலீசார் ஏன் கேட்கவில்லை? கோர்ட்டு கேள்வி



சென்னை, ஜூலை 9

மதுரையைச் சேர்ந்த சபரிகாந்தன் என்பவர் ஐகோர்ட்டு மதுரை கிளையில் தனது மகன் சுகுமார் மீது போடப்பட்டுள்ள குண்டர் சட்டத்தை ரத்து செய்யக்கோரி மனுத்தாக்கல்செய்தார். இந்தவழக்கு விசாரணையின்போது, சுகுமார் குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு சென்ற முறை விசாரணைக்கு வந்தபோது, பல குற்றச் சம்பவங்களில் தொடர்புடையவர்களின் ஜாமீனை ரத்து செய்யக்கோரி சம்பந்தப்பட்ட போலீசார் ஏன் மனுத்தாக்கல் செய்வதில்லை என குறிப்பிட்டு, தமிழக சட்ட ஒழுங்கு பிரிவின் உதவி காவல்துறை தலைவர் விளக்கமளிக்க ஐகோர்ட்டு உத்தரவு பிறப்பித்தது.

இந்நிலையில் இந்த வழக்கு நீதிபதிகள் ஜெகதீஷ் சந்திரா, பூர்ணிமா அமர்வில் விசாரணைக்கு வந்தது. தமிழக சட்ட ஒழுங்கு பிரிவின் உதவி காவல்துறை தலைவர் ஸ்ரீநாதா நேரில் ஆஜராகி அறிக்கை தாக்கல் செய்தார். அதில் ஜாமீனை ரத்து செய்வது தொடர்பான சுற்றறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

மேலும், 2024 ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2025 ஜூன் வரை 355 ஜாமீன் ரத்து செய்யப்பட்டுள்ளது.

790 மனுக்கள் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. 1,181 மனுக்கள் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கின்றன என தெரிவிக்கப்பட்டது.

அரசுத்தரப்பில் கூடுதல் விவரங்களைத் தாக்கல் செய்ய கால அவகாசம் கோரப்பட்டது. இதையடுத்து நீதிபதிகள், வழக்கு தொடர்பாக நிலை அறிக்கையைத் தாக்கல் செய்ய உத்தரவிட்டு வழக்கை 2 வாரங்களுக்கு ஒத்திவைத்தனர்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253 9.7.2025

# எடப்பாடி பழனிசாமி கூட்டத்தில், கூட்ட நெரிசலை பயன்படுத்தி ரூ.2 லட்சம் பணம் திருட்டு

கோவை, ஜூலை 9

தமிழக சட்டசபை தேர்தலை எதிர்கொள்ள அ.தி.மு.க. முழு வீச்சில் தயாராகி வருகிறது. அதன் ஒரு பகுதியாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, தமிழகம் முழுவதும் மக்கள் சந்திப்பு சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருக்கிறார். சட்டசபை தொகுதி வாரியாக "மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்" என்ற பெயரில் எடப்பாடி பழனிசாமி மேற்கொள்ளும் சுற்றுப்பயணத்தில் பங்கேற்க கூட்டணி கட்சிகளுக்கும் அழைப்பு விடப்பட்டுள்ளது.

இதன்படி, எடப்பாடி பழனிசாமியின் மக்கள் சந்திப்பு சுற்றுப்பயணம் இன்று காலை 9 மணிக்கு கோவை மாவட்டத்தில் தொடங்கியது. அதன்படி, மேட்டுப்பாளையம் தொகுதிக்கு உட்பட்ட தேக்கம்பட்டி வன பத்திரகாளி அம்மன் கோவிலில் சிறப்பு வழிபாடு நடத்திய பிறகு,அவர் சுற்றுப்பயணம் தொடங்கினார். இந்த நிகழ்வில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி மற்றும் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் பங்கேற்றனர். பா.ஜ.க. சார்பில் வானதி சீனிவாசன் எம்.எல்.ஏ. மற்றும் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

வன பத்திரகாளி அம்மன் கோவிலை தொடர்ந்து, மேட்டுப்பாளையம் சாலை மண்டபத்தில் விவசாயிகளுடன் எடப்பாடி பழனிசாமி கலந்துரையாடுகிறார். தொடர்ந்து மேட்டுப்பாளையம் ஊட்டி சாலை, காந்தி சிலை அருகே 'ரோடு ஷோ' மூலம் மக்களை எடப்பாடி பழனிசாமி சந்திக்கிறார். மக்களுடன் உரையாடுகிறார்.

இந்த நிலையில், எடப்பாடி பழனிசாமியின் கூட்டத்தில், கூட்ட நெரிசலை பயன்படுத்தி 3 பேரிடம் பணம் திருடப்பட்டுள்ளது. இவற்றில் 2 பேரிடம் தலா ரூ.1 லட்சமும், ஒருவரிடம் ரூ.2,500 பணமும் என மொத்தம் ரூ.2 லட்சத்து 2 ஆயிரத்து 500 கொள்ளையடிக்கப்பட்டு உள்ளது. இதில், தேக்கம்பட்டி ஊராட்சி முன்னாள் துணை தலைவர் தங்கராஜிடம் ரூ.1 லட்சமும், ஆனந்த் என்பவரிடம் ரூ.1 லட்சமும் மற்றும் அபு என்பவரிடம் ரூ.2,500 பணமும் திருடப்பட்டு உள்ளது. இதுபற்றி போலீசில் புகார் அளிக்கப்பட்டு உள்ளது. இதனை தொடர்ந்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் நடப்பாண்டில் 20% கூடுதல் மாணாக்கர் சேர்க்கை இடங்கள் - அமைச்சர் அறிவிப்பு



சென்னை, ஜூலை 9

அரசுகலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணாக்கர்கள் அதிகளவில் விண்ணப்பித்து சேர்க்கைக்காக காத்திருப்பதை அறிந்து, தமிழ்நாடு முதல் அமைச்சரின் அறிவுறுத்தலின்படி 2025-26 கல்வியாண்டிற்கு மாணாக்கர்கள் உயர்கல்வி பெற 20% கூடுதல் மாணாக்கர் சேர்க்கை இடங்கள் வழங்கப்படும் என உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

முதல்அமைச்சர் உயர்கல்வியும், மருத்துவமும் தனது இருகண்களாக கொண்டு நமது இளைய சமுதாயம் உலகளவில் உயர்ந்த நிலையில் திகழ வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு உயர்கல்வி அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்பதால் புதுமைப்பெண், தமிழ் புதல்வன் போன்ற முத்தான திட்டங்களை வழங்கியதுடன் திறன் மிகுந்த சமுதாயத்தை உருவாக்க நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகளை இலவசமாக திறன் மேம்பாட்டு துறையின் மூலம் வழங்கி வருகிறார்.

இதனால் கடந்த நான்காண்டுகளில் உயர்கல்வி சேர்க்கை பெறும் மாணாக்கர்களின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இந்தியாவிலேயே மாணாக்கர் சேர்க்கை விகிதத்தில் தொடர்ந்து தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்கி வருகிறது.

இவ்வாண்டும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்க்கைக்காக அதிகளவில் மாணாக்கர்கள் விண்ணப்பித்து காத்திருக்கின்றனர். இதனை அறிந்திருந்த நமது முதல்அமைச்சர் இவ்வாண்டு புதிதாக 15 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கிட ஆணையிட்டு, தற்போது தொடங்கப்பட்டுள்ளன.

இருப்பினும் உயர்கல்வி பயில பெருமளவில் மாணாக்கர்கள் காத்திருப்பதை அறிந்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு கூடுதலாக 20% மாணவர் சேர்க்கை இடங்கள் உயர்த்தி வழங்கவும், அதேபோல் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு 15% இடமும், சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு 10% இடமும் கூடுதலாக மாணவர் சேர்க்கை இடங்கள் உயர்த்தி வழங்கவும் தமிழ்நாடு முதல்அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி, இவ்வாண்டு மேற்படி கூடுதல் இடங்கள் அறிவிக்கப்படுகிறது. மாணாக்கர்கள் இந்த நல்வாய்ப்பினை பயன்படுத்தியும், தமிழ்நாடு முதல் அமைச்சரின் ஏழை, எளிய கிராமப்புற மாணாக்கர்கள் உயர்கல்வியில் சிறந்து விளங்க அறிவித்துள்ள அனைத்து நலத்திட்ட உதவிகளையும் பெற்று பெற்றோர்களுக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்து தங்களது வாழ்வில் முன்னேற்றம் பெற வாழ்த்துகிறேன். இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் (9.7.2025)

**மேஷம்:** எதிர்பார்த்த முடிவுகள் நேரத்தில் கிட்டும். தொழில் வளர்ச்சி பயக்கும். பரிகாரம்: சூரிய நமஸ்காரம் செய்யவும்.

**ரிஷபம்:** குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். கடன் சுமை குறையும். பரிகாரம்: விநாயகர் வழிபாடு பயனளிக்கும்.

**மிதுனம்:** முக்கிய பொறுப்புகள் உண்டாகும். வாகன கவனமாக ஓட்டவும். பரிகாரம்: துர்கை அம்மனுக்கு விளக்கு ஏற்றி வழிபடவும்.

**கடகம்:** வீடு சார்ந்த விவகாரங்களில் தீர்வு கிட்டும். உறவினரால் நன்மை உண்டு. பரிகாரம்: சந்திரனை வணங்குங்கள்.

**சிம்மம்:** பணவரவு அதிகரிக்கும். சொத்துச் சொரூப மாற்றம் சாத்தியம். பரிகாரம்: சூரியனை வணங்கி தைரியமாக செயல்படுங்கள்.

**கன்னி:** புதிய முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். வழக்கு விசாரணை சாதகமாக அமையும். பரிகாரம்: திருநீறு திலகம் போடுவது நல்லது.

**துலாம்:** தொழிலில் புதிய வாய்ப்புகள் தேடலாம். நிதி நிலை சிறக்கும். பரிகாரம்: மகாலட்சுமி வழிபாடு செய்யவும்.

**விருச்சிகம்:** மனதிற்குள் பதட்டம் இருக்கலாம். யோசித்து முடிவெடுக்கவும். பரிகாரம்: ஹனுமான் சாலிசா பாராயணம் நன்மை தரும்.

**தனுசு:** புதிய நண்பர்கள் தோன்றுவர். வீண் சண்டைகளை தவிர்க்கவும். பரிகாரம்: தக்காளி சிவனுக்கு அபிஷேகம் செய்வது நன்று.

**மகரம்:** திட்டமிட்ட பணிகள் வெற்றிகரமாக நிறைவேறும். உயரதிகாரிகளிடம் பாராட்டு கிடைக்கும். பரிகாரம்: நவகிரக ஸ்தோத்திரம் பாடவும்.

**கும்பம்:** பழைய நண்பர் உதவியால் நன்மை. உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் தேவை. பரிகாரம்: தேவர்களை நினைத்து வணங்குங்கள்.

**மீனம்:** புதிய சொத்து வாங்கும் யோகம். குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும். பரிகாரம்: ஸ்ரீ ராமர் கோயிலுக்கு சென்று வணங்கவும்.

# இந்துக்கள் பங்கேற்கும் மத நல்லிணக்க மொகரம் பண்டிகை



ராமநாதபுரம் ஜூலை 9

சாயல்குடி அருகே பெரியகுளம் கிராமத்தில் ஆண்டுதோறும் மொகரம் பண்டிகையில் இஸ்லாமியர்களுடன் இந்துக்களும் இணைந்து, சமூக நல்லிணக்கத்தை போற்றும் நிகழ்வாக நடத்தி வருகின்றனர்.

இது குறித்து பெரியகுளம் கிராம மக்கள் கூறுகையில், "பல ஆண்டுகளுக்கு முன் கிராமத்தில் அசேன், உசேன், என இரு சகோதரர்கள் இருந்தனர். அவர்கள் அப்பொழுது நடைபெற்ற போரில் இறந்தனர். இதனை கேள்விப்பட்ட அவர்களது சகோதரி மாமுனாச்சி, கட்டைகளை அடுக்கி தீ மூட்டி தீயில் இறங்கி உயிரை மாய்த்துக் கொண்டார். அதன் பின்பு அந்த கிராமத்தில் கொடிய காலரா நோயால் பாதிக்கப்பட்டு மக்கள் ஒவ்வொருவராக இறந்தனர். அப்போது அங்குள்ள ஒரு பெண்ணின் கனவில் தலையில் முக்காடு அணிந்து பெண் போன்ற வடிவம் தோன்றி, மொகரம் நாளில் கட்டைகளை அடுக்கி தீ மூட்டி மக்கள் தீ இறங்கி வழிபட்டால், காலரா நோய் கட்டுப்படும் எனக் கூறி மறைந்தது. கனவில் தோன்றியதை பொதுமக்களிடம் அந்தப் பெண் தெரிவிக்க, மக்களும் கட்டைகளை அடுக்கி தீ மூட்டி அதில் இறங்கி வழிபட்டனர். கனவில் தோன்றிய பெண் கூறிய படி அந்த கடுமையான நோய் தீர்ந்தது. அது முதல் பெரியகுளம் கிராமத்தில் மொகரம் முதல் நாள் காப்பு கட்டி பதினோராவது நாள் விறகுகளை அடுக்கி தீமூட்டி பூக்குழி இறங்கும் நிகழ்வு நடைபெறுகிறது" என தெரிவித்தனர். அவ்வகையில் இந்த ஆண்டும் மொகரம் பண்டிகையை முன்னிட்டு மதநல்லிணக்க பூக்குழி இறங்கும் விழா நடைபெற்றது. ஆண்கள் பூக்குழி இறங்கியும், பெண்கள் தலையில் முக்காடு அணிந்து தீக்கங்குகளை தலையில் போட்டும் மாமுனாச்சியை வேண்டி நேர்த்திக்கடன் செலுத்தினர்.

# மாம்பழங்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலையை தி.மு.க அரசு நிர்ணயிக்க வேண்டும் டி.டி.வி.தினகரன்

சென்னை, ஜூலை 9

தி.மு.க அரசின் அலட்சியப்போக்கால் நடப்பாண்டில் சுமார் 150 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பை சந்தித்திருக்கும் மா விவசாயிகள் – பாதிக்கப்பட்ட மா விவசாயிகளுக்கு உரிய இழப்பீடை வழங்குவதோடு மாம்பழங்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலையை திமுக அரசு நிர்ணயிக்க வேண்டும். தமிழகத்தில் மாங்காய் உற்பத்திக்கு நடப்பாண்டில் நியாயமான விலை கிடைக்காததாலும் மத்திய அரசுக்கு கடிதம் எழுதுவதோடு தன் கடமை முடிவடைந்துவிட்டதாக ஒதுங்கிக் கொண்ட முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களாலும் நடப்பாண்டில் சுமார் 150 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பீட்டை சந்தித்திருப்பதாக நாளிதழ்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.


கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்கள் மத்திய அரசுடன் இணைந்து அம்மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு இழப்பீடு மற்றும் ஊக்கத்தொகை அறிவித்திருக்கும் நிலையில், தி.மு.க அரசும், அதன் 39 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதால் மா உற்பத்தியை விட்டே வெளியேற வேண்டிய கட்டாயத்திற்கு ஆயிரக்கணக்கான மா விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

பருவநிலை மாற்றம், நோய் மற்றும் பூச்சித் தாக்குதல், விளைச்சல் பாதிப்பு, உரிய விலையின்மை என ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் நடை பெற்று வரும் மா விவசாயத்தை பாதுகாக்கவோ, உரிய இழப்பீடு வழங்கவோ எந்த வித நடவடிக்கையும் எடுக்காத தி.மு.க அரசின் அலட்சியப் போக்கால் நடப்பாண்டில் மட்டும் சுமார் 150 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பீடு ஏற்பட்டிருப்பதாக மா விவசாயிகள் வேதனை தெரிவிக்கின்றனர்.

எனவே, ஆந்திரா, கர்நாடக மாநிலங்களை பின்பற்றி தமிழகத்தில் பெரும் நஷ்டத்தை சந்தித்திருக்கும் தமிழகத்தைச் சேர்ந்த மா விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டை உடனடியாக அறிவிப்பதோடு, நெல், கரும்பு உள்ளிட்ட பயிர்களை போல மாம்பழங்களுக்கும் குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயிக்க வேண்டும் என தமிழக அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## விம்பிள்டன் டென்னிஸ்: ரஷிய வீராங்கனை காலிறுதி சுற்றுக்கு முன்னேற்றம்



லண்டன், 'கிராண்ட்ஸ்லாம்' போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் தொடர் லண்டனில் நடந்து வருகிறது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற ரவுண்ட் ஆப் 16 சுற்று ஆட்டம் ஒன்றில் ரஷிய வீராங்கனை மிர்ரா ஆண்ட்ரீவா ,அமெரிக்கா வீராங்கனை எமா நவரோ உடன் மோதினார்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடி ஆதிக்கம் செலுத்திய மிர்ரா ஆண்ட்ரீவா 6-2,6-3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார். இதனால் அவர் காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

## ஆர்ச்சர் விளையாடுவதற்கு தயாராக இருக்கிறார் மெக்கல்லம்



சுப்மன் கில் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடி வருகிறது. இதில் முதல் ஆட்டத்தில் இங்கிலாந்தும், 2வது ஆட்டத்தில் இந்தியாவும் வெற்றி பெற்றுள்ளன. இதன் காரணமாக 2 போட்டிகள் முடிவில் தொடர் 1-1 என சமனில் உள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான 3வது டெஸ்ட் போட்டி லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் வரும் 10ம் தேதி தொடங்குகிறது. இந்நிலையில், இந்த போட்டிக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. 2வது டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து அணியில் இடம்பிடித்துள்ள வீரர்கள் 3வது போட்டிக்கான அணியில் இடம்பிடித்துள்ளனர்.

இந்நிலையில், 3வது போட்டியிலாவது இங்கிலாந்து முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ஜோப்ரா ஆர்ச்சர் விளையாடுவாரா? என ரசிகர்கள் கேள்வி எழுப்பி உள்ளனர். இங்கிலாந்து அணிக்காக இதுவரை 13 டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே விளையாடியுள்ள ஆர்ச்சர் 42 விக்கெட்டுகளை கைப்பற்றி அசத்தியுள்ளார். இருப்பினும் காயம் காரணமாக கடந்த 2021ம் ஆண்டு முதல் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து அவர் விலகி இருந்தார்.

அவர் தற்போது காயத்தில் இருந்து குணமடைந்துள்ளதால் அவர் மீதான எதிர்பார்ப்புகளும் ரசிகர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது. அதிலும் இரண்டாவது டெஸ்ட் போட்டியிலேயே ஆர்ச்சர் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், சில காரணங்களால் அவரால் பிளேயிங் லெவனில் இடம்பிடிக்க முடியவில்லை. இதனால் தான் அவர் மூன்றாவது போட்டியில் விளையாடுவாரா என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

இந்நிலையில், ஆர்ச்சர் விளையாடுவதற்கு தயாராக உள்ளதாக இங்கிலாந்து பயிற்சியாளர் மெக்கல்லம் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, 3வது போட்டியில் நாங்கள் அதிகமான பவுன்ஸ், வேகம், கொஞ்சம் இருபுறமும் பந்து திரும்புவதற்கு தேவையான மூமன்ட் ஆகியவை இருக்கக்கூடிய பிட்ச் அமையும் என்று நம்புகிறோம்.

ஆர்ச்சர் விளையாடுவதற்கு தயாராக இருக்கிறார். அது மிகப்பெரிய உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. காயத்தால் டெஸ்ட் கிரிக்கெட்டில் நீண்ட காலம் விளையாடாத அவரால் என்ன சாதிக்க முடியும் என்பது நமக்குத் தெரியும். தற்போது வாய்ப்பு அவரை தேடி வந்துள்ளது. இந்த வாய்ப்பை மீண்டும் பிடித்து அவர் தன்னுடைய முன்னேறிய செயல்பாடுகளை வெளிப்படுத்துவார். இவ்வாறு அவர் கூறினார்.

## இளையோர் ஒருநாள் கிரிக்கெட்; ஆறுதல் வெற்றி பெற்ற இங்கிலாந்து... தொடரை கைப்பற்றிய இந்தியா



இந்திய ஜூனியர் கிரிக்கெட் அணி (19 வயதுக்குட்பட்டோர்) இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடி வருகிறது. இவ்விரு அணிகளுக்கு இடையே முதலில் ஒருநாள் தொடர் நடைபெற்று வருகிறது. அதன்படி நடைபெற்ற முதல் 4 போட்டிகளின் முடிவில் இந்திய அணி தொடரை 3-1 என்ற கணக்கில் கைப்பற்றி விட்டது.


இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 5வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி நேற்று நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற இந்திய அணியின் கேப்டன் ஆயுஷ் மாத்ரே முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்தார்.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 210 ரன்கள் அடித்தது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக ஆர்.எஸ். அம்ப்ரிஷ் 66 ரன் எடுத்தார். இங்கிலாந்து தரப்பில் ஏஎம் பிரஞ்சு மற்றும் ரால்பி ஆல்பர்ட் தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

இதனையடுத்து 211 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இங்கிலாந்து 31.1 ஓவரில் 3 விக்கெட்டை மட்டும் இழந்து 211 ரன் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்றாலும் அது ஆறுதல் வெற்றியாகவே அமைந்தது.

முடிவில் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 3-2 என்ற கணக்கில் இந்திய அணி கைப்பற்றியது. தொடர்ந்து இவ்விரு அணிகள் இடையிலான டெஸ்ட் தொடரின் முதல் போட்டி வரும் 12ம் தேதி தொடங்குகிறது

## நான் கர்ப்பமாக இருப்பதாக வதந்தி பரவ அவர்தான் காரணம்...சோனாக்சி சின்ஹா




தான் கர்ப்பமாக இருப்பதாக இணையத்தில் வதந்தி பரவ தனது கணவர்தான் காரணம் என்று நடிகை சோனாக்சி சின்ஹா கூறி உள்ளார்.

சமீபத்திய புகைப்படம் ஒன்றில் சோனாக்சி சின்ஹா, உடல் எடை அதிகரித்து காணப்பட்டதால் அவர் கர்ப்பமாக இருப்பதாக தகவல் வெளியாகியது. இதை ரசிகர்களும் நம்பி, அவருக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

இந்நிலையில், தனது கணவருடனான வாட்ஸ் அப் உரையாடலின் ஸ்க்ரீன் ஷாட்டை பகிர்ந்து வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார். தன்னுடைய கணவர் நேரம் காலம் பார்க்காமல் அடிக்கடி, ருசியாக சாப்பிடுவதற்கு ஏதாவது தனக்கு வாங்கிக் கொடுத்துக் கொண்டே இருப்பதாகவும் இதன் காரணமாகவே உடல் எடை அதிகரித்து விட்டதாகவும் சோனாக்சி சின்ஹா விளையாட்டாக கூறியுள்ளார். தற்போது இந்த ஸ்க்ரீன் ஷாட் புகைப்படம் இணையத்தில் வேகமாக பரவி வருகிறது.

## "வாழ்க்கையை உணர விரும்பினால்"...இந்த படத்தை பாருங்கள் நயன்தாரா



இயக்குனர் ராமின் சமீபத்திய நகைச்சுவை படமான பறந்து போவிற்கு நடிகை நயன்தாரா பாராட்டுகளை தெரிவித்திருக்கிறார். இது குறித்து அவர் தனது இன்ஸ்டாகிராம் ஸ்டோரியில் பகிர்ந்துள்ள பதிவில்,

"இந்த பரபரப்பான உலகத்தை விட்டு விலகி உண்மையான வாழ்க்கை என்னவென்று உணர விரும்பினால், குழந்தைகளை கூட்டிக்கொண்டு மலை ஏறுங்கள்.. அல்லது ஏரியில் அவர்களுடன் நீந்தி விளையாடுங்கள்.. அல்லது அவர்களை ராம் சாரின் "பறந்து போ" படத்திற்கு அழைத்துச் சென்று காணுங்கள்.

வாழ்க்கையில் நமக்கு என்ன தேவை , எதை இழக்கிறோம் என்பதை இந்த படம் அழகாக எடுத்துரைக்கிறது. நான் பார்த்த மிக இனிமையான படங்களில் இதுவும் ஒன்று. ராம் சார் நீங்கள் பெஸ்ட் இயக்குனர். சிவா, கிரேஸ் ஆண்டனி, அஞ்சலி என ஒட்டுமொத்த படக்குழுவுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்" என்று தெரிவித்திருக்கிறார்.

## புதிய வொண்டர் வுமன் அட்ரியா அர்ஜோனாவா?




டிசி ஸ்டுடியோஸின் தலைமை நிர்வாக அதிகாரி ஜேம்ஸ் கன் சமீபத்தில் அளித்த பேட்டியில், வொண்டர் வுமனை மையமாகக் கொண்ட ஒரு புதிய படம் உருவாக இருப்பதாக தெரிவித்தார்.

இந்தப் படம் வேறுபட்ட கதைக்களத்துடன் இருக்கும் என்பதால், டிசி ஸ்டுடியோஸ் வொண்டர் வுமனாக நடிக்க கால் கடோட்டைத் தவிர வேறு ஒரு நடிகையை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளதாக தெரிகிறது.

இதனையடுத்து, இந்த படத்தில் அட்ரியா அர்ஜோனா வொண்டர் வுமனாக நடிக்க இருப்பதாக இணையத்தில் வதந்திகள் பரவ ஆரம்பித்தன.

இந்நிலையில், இந்த வதந்திகளுக்கு ஜேம்ஸ் கன் நகைச்சுவையாக பதிலளித்திருக்கிறார். அதன்படி, சமூக வலைதளத்தில் அட்ரியா அர்ஜோனாவை தான் பின்தொடர்வதால்தான் இந்த வதந்திகளை உருவாக்கியிருக்கிறார்கள் என்று கன் கூறினார்.

"தி பெல்கோ எக்ஸ்பிரிமென்ட்" படத்தில் இருவரும் இணைந்து பணியாற்றியதிலிருந்து, கடந்த ஏழு ஆண்டுகளாக அர்ஜோனாவை பின்தொடர்ந்து வருவதாக கன் விளக்கினார். மேலும், அர்ஜோனா ஒரு சிறந்த வொண்டர் வுமனாக இருப்பார் என்றும் கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.